IntSym 2019
9th International Symposium

# வட இலங்கைத் தமிழர்களது சமுதாய வாழ்வியல் பண்பாட்டின் எதிர்மறையான சில அடையாளங்கள்:

## ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலத்தினை (1930-1958) அடிப்படையாகக் கொண்டது

**க. அருந்தவராஜா[279] & சி. மங்களரூபி[280]**

Correspondence: arunn.msu@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

வடஇலங்கையில் பல்லின மக்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வந்தாலும்கூட அவர்களில் இப்பகுதியில் பெரும்பான்மையாகக் காணப்படுகின்ற தமிழ் மக்கள் அவர்களுக்கே உரிய தனித்துவமான சிறப்பான பண்பாடு சார்ந்தவர்களாக வாழ்ந்து வருகின்றனரென்பதனை வரலாறு கூறும். அதேநேரத்தில் இவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் எதிர்மறையான சில பண்பாட்டு அடையாளங்களை உள்வாங்கிக் கொண்டவர்களாக வாழ்ந்துள்ளனரென்பதும் கவனிக்கத்தக்கது. இவற்றினையும்கூட அவர்களது பண்பாட்டின் ஒரு வடிவமாகவே பார்க்க முடியும். இவற்றினை நாம் தற்காலத்தில் பிற்போக்கான தன்மை கொண்ட சில அடையாளங்களாகவும் இனங்காணலாம். இத்தகைய பண்பாட்டின் எதிர்மறையான அடையாளங்கள் சிலவற்றினை யாழ்ப்பாண அரசிற்கு முற்பட்ட காலத்திலிருந்து தற்காலம்வரையான காலத்திலும்கூட அவர்களிடமிருந்து முற்றாக அகற்ற முடியாமல் உள்ளதென்பதே ஆச்சரியம். மேற்குறித்த இத்தகைய பண்பாட்டு எதிர்மறையான அடையாளங்களைக் காலனித்துவ ஆட்சியாளரான ஆங்கிலேயரது காலத்திலும்சரி நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னராகத் தொடர்ச்சியாகப் பின்வந்த ஆண்டுகள் சிலவற்றிலும்சரி எம்மால் தொடர்ச்சியாக இனங்காண முடிகின்றது. அவ்வகையில் இலங்கை சுதந்திரமடைவதற்கு சிலகாலம் முன்னதாக வடஇலங்கையிலிருந்து வெளிவர ஆரம்பித்த ஈழகேசரி என்ற தமிழ் வார வெளியீடானது சுதந்திரம் அடைந்ததன் பின்னராகவும் வெளிவந்து அக்கால வட இலங்கையில் வாழ்ந்துவந்த தமிழ்ச் சமுதாயத்தினைப் படம் பிடித்துக் காட்டியிருந்தது. முற்போக்குச் சிந்தனையினைக் கொண்ட இப்பத்திரிகையானது அக்கால வடஇலங்கைத் தமிழர்களது சமூகக் கட்டமைவின் ஒவ்வொரு தளத்தினையும் அடையாளப்படுத்தியது. மேலும் அக்கால வட இலங்கையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தினது வரலாற்றினை அறிய விரும்புகின்ற எவரும் ஈழகேசரியினை ஒரு ஆதாரமாகப் பயன்படுத்தாமல் அப்பால் செல்ல முடியாது. காரணம் அக்காலத் தமிழ் மக்களது சமூகக் கட்டமைவுகள், அவர்களது பண்பாடுகள், பாரம்பரியங்கள், பொருளாதாரநிலை, கல்விநிலை போன்ற பல்வேறு விபரங்களை இப்பத்திரிகை தருகின்ற தகவல்கள் மூலமாக அறிந்துகொள்ள முடிகின்றது. எனவே அக்கால வடஇலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தினது (ஈழகேசரிகால) எதிர்மறையான சில பண்பாட்டு அடையாளங்கள் வரலாற்றில் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை இப்பத்திரிகையின் மூலமாக எடுத்துக்காட்டுவதே ஆய்வினது பிரதான நோக்கமாக உள்ளது. வரலாற்று ஆய்வாளன் ஒருவனைப் பொறுத்தவரை அவன் ஆய்வில் தான் சார்ந்த சமூகத்திற்குச் சாதகமான ஆய்வினை மட்டுமே மேற்கொள்வதென்பது தவறானது. இத்தகையதொரு பின்னணியிலேதான் ஆய்வாளரால் வடஇலங்கைச் சமுதாயத்தின் ஈழகேசரிகால எதிர்மறையான பண்பாட்டு அடையாளங்கள் சில வெளிக்கொணரப்படுகின்றது. முழுக்க முழுக்க வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் விமர்சன ஆய்வாக அமைந்த இவ்வாய்வில் ஈழகேசரி பத்திரிகையே ஆய்வில் பிரதான இடத்தினைப் பெறுவதனால் அது ஆய்வில் முதந்தர ஆதாரமாகப் பயன்படுத்தப்படுகின்றது. அதேநேரத்தில் பின்னாளில் இப்பத்திரிகை தொடர்பாகவும் வடஇலங்கைத் தமிழ் சமூகந் தொடர்பாகவும் எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள், நேர்காணல்கள், அவதானிப்புக்கள், களஆய்வுகள் போன்றனவும் ஆய்வினது முக்கியத்துவம் கருதி மேலதிகத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. வடஇலங்கைத் தமழர்களின் எதிர்மறையான சில பண்பாட்டு அடையாளங்களை வெளிக்கொணர்வதில் ஈழகேசரிக்கும் பங்கிருந்ததென்பதே ஆய்வின் கருதுகோளாக அமைகின்றது. பொதுப்படப் பார்த்தால் ஈழகேசரிப் பத்திரிகையானது ஆய்விற்குரிய பிரதேசத்திலிருந்து ஆய்விற்குரிய மக்கள் தொடர்பாக ஒரு சமகாலத்துப் பத்திரிகையாக வெளிவந்தமையினால் அவை தருகின்ற தரவுகள் பெருமளவிற்கு உண்மையானவையாக இருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம். இதனால் அது கூறுகின்ற தமிழர்களது பண்பாடு பற்றிய எதிர்மறையான அடையாளங்களும் நிஜமானாதாக இருப்பதற்கான சந்தர்ப்பங்களும் அதிகம்.

[279] Department of History, University of Jaffna, Sri Lanka.
[280] Department of History, University of Jaffna, Sri Lanka.

**பிரதான சொற்கள்** : தமிழ் சமூகம், பாரம்பரியங்கள், சுதேசக் கல்வி, ஆலயப் பிரவேசம், பிரதேசப் பத்திரிகை.

## அறிமுகம்

பண்பாடென்பது மனித இனத்திற்கே உரிய பொதுவான இயல்புகளிலொன்று. இத்தகைய அக்கால வடஇலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டின் எதிர் மறையான பண்பாட்டு அடையாளங்களை எமக்குத் தருகின்ற ஊடகங்களில் ஈழகேரிப் பத்திரிகையுமொன்றாக விளங்கியிருந்ததென்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கள் இல்லை. எதிர்மறையான பண்பாட்டம்சமென்பது மிகவும் பிற்போக்குத்தனமான அம்சங்களைக் குறிக்கின்றது. அக்காலப்பகுதியில் சிலவேளை அது சரியானதாகவும் இக்காலப்பகுதியில் அது பிற்போக்குத் தனமானதாகவும் இருக்கும். மேலும் அக்குறித்த காலப்பகுதியில் வாழ்ந்த சிலர் அது தவறென சுட்டிக்காட்டித் தம்மை முற்போக்குவாதிகளாகவும் அடையாளப்படுத்தியிருந்தனர். அவ்வகையில் வடஇலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தின் அசைவுகள் ஒவ்வொன்றினையும் தான் வெளிவந்துகொண்டிருந்த காலப்பகுதி முழுவதும் சிறப்பாக வெளிப்படுத்திய ஈழகேசரிப் பத்திரிகையானது நடுநிலையிலிருந்து பல்வேறு தகவல்களை மேற்கூறப்பட்ட விடயமாக வாசகர்களுக்காகத் தெரியப்படுத்தியிருந்தது. அவற்றில் அக்காலத்தில் நிலவிவந்த சாதியமைப்பினது பிரதான இயல்புகள், இந்து சமயத்தில் இழையோடிக் காணப்பட்ட சில பிரச்சினைகள், தமிழ் சமுதாயத்தினது கல்விநிலை, அக்கால மக்கள் அன்றாடம் சந்தித்துவந்த பல்வேறு வகையான நெருக்கடிகள் போன்ற விடயங்கள் பலவற்றினை மக்களுக்குத் தெரியப்படுத்தியது. இதனால் அக்காலப்பகுதியில் எதிர்ப்புக்கள் பலவற்றினையும் ஈழகேசரி சந்தித்திருந்தது. இத்தகைய அம்சங்கள் சிலவற்றின் ஊடாகவே ஈழகேசரிகால வடஇலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தினது வாழ்வியல் பண்பாட்டின் எதிர்மறையான விடயங்கள் பலவற்றினை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

அவ்வகையில் இத்தகைய குறித்த அடையாளங்களை குறித்த பத்திரிகையின் வாயிலாக எடுத்துக்காட்டுவதே ஆய்வினது பிரதான நோக்கமாக உள்ளது. முழுக்க முழுக்க வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் விமர்சன ஆய்வாக அமைந்த இவ்வாய்வில் ஆய்வின் பிரதான ஆதாரமான ஈழகேசரியே முதலாம் நிலைத் தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பின்னாளில் இவ்விடயமாக ஆய்வாளர்களினால் எழுதப்பட்ட கட்டுரைகள், நூல்கள் மற்றும் களஆய்வுகள், நேர்காணல்கள், அவதானிப்புக்கள் என்பன ஆய்வின் தேவை கருதி இரண்டாம்நிலைத் தரவுகள் வரிசையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. வடஇலங்கைத் தமிழர்களின் எதிர்மறையான சில பண்பாட்டு அடையாளங்களை வெளிக்கொணர்வதில் ஈழகேசரிக்கும் பங்கிருந்ததென்பதே ஆய்வினது முக்கியமான கருகோளாக அமைகின்றது. இத்தகைய கருதுகோளினை மேற்குறித்த தலைப்பிலான இவ்வாய்வின் முடிவுகள் நிருபிக்கின்றன.

## ஈழகேசரியின் தோற்றம்

1930ஆம் ஆண்டு காலத்தினை அடுத்த சுமார் இருபத்தைந்து வருட காலப்பகுதியினை அறிஞர்கள் தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் பத்திரிகைக் காலம் என்பர். (சுப்பிரமணியம்.நா.,1978,ப.169) இத்தகையதொரு பத்திரிகைக் காலத்தினைத் தனக்குள் உள்ளடக்கிய வகையிலேதான் ஈழகேசரிப் பத்திரிகை வெளிவர ஆரம்பிக்கின்றது. தென்னிந்தியாவில் பத்திரிகைக் காலங்களை மணிக்கொடிக்காலம், சரஸ்வதிகாலம் எனக் குறிப்பிடுவதனைப் போன்று ஈழத்திலும் தனக்கென ஒரு காலப்பகுதியினை ஏற்படுத்தி அது சிறிய காலமெனினும் அக்காலகட்டதிலே புதுமைகள், புரட்சிகள் செய்து நினைவில் நிற்பது ஈழகேசரிப் பத்திரிகையே என்றால் மிகையாகாது. (சிவகுருநாதன்,இ.1993) 1930யூன் 30இல் தனது வார வெளியீட்டினை முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த இப்பத்திரிகையானது தொடர்ந்து 1958வரை 28 வருடங்கள் சிறப்பாகத் தனது பணிகளை தமிழ் பேசும் மக்களுக்காகச் செய்து வந்தது. இப்பத்திரிகையானது நா.பொன்னையா என்பவரினால் ஆரம்பிக்கப்பட்டு அவருடைய சொந்த அச்சகமான சுன்னாகத்தில் அமைந்திருந்த திருமகள் அழுத்தகத்திலிருந்து

வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இது ஒரு வாராந்தப் பத்திரிகையாக இருந்தாலும்கூட அக்காலத் தமிழ் மக்களது சகலதுறை வளர்ச்சியிலும் பெரும்பங்கினை ஆற்றியிருந்தது.

வடஇலங்கையில் தோன்றிய முதலாவது பிரேதசப் பத்திரிகையாகக் கருதப்படுகின்ற இப்பத்திரிகை அரசியல் சூழலை ஏனைய சூழலிலிருந்து பிரித்துப்பாராமல் பொருளாதார, சமூக, கலை, இலக்கியப் பண்பாட்டுச் சூழலுடன் ஒருங்கிணைத்துப் பார்த்ததென்றே கூறுதல் வேண்டும். எந்த ஒரு அரசியல் கட்சியினது பின்னணிகூட இதற்குக் கிடையாது. *(உதயன்,2002மார்ச்சு18,ப.03)* தொடக்கத்தில் இது ஒரு வாராந்தப் பத்திரிகையாகப் புதன் கிழமைகளில் வெளிவந்தது. பின்னர் இது 1933ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளிவரத் தொடங்கியது. அவ்வகையில் தொடர்புசாதன வசதிகள் குறைந்த அக்காலத்தில் ஈழகேசரியின் சேவை அவசியமானதொன்றாகக் காணப்பட்டது. ஈழகேசரி புதினங்களை வெளிப்படுத்துகையில், மிகவும் சிறப்பான முறையில் அதனை விளங்கவைக்கின்ற தன்மை கொண்டதாகக் காணப்பட்டது. புதினங்களில் சுதேச புதினங்களுக்குத்தான் அதிகளவு முக்கியத்துவத்தைக் கொடுத்திருந்தது. ஈழகேசரிப் பத்திரிகையானது தனியே வடஇலங்கையில் மட்டும் வாசகர் வட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. அது தென்னிலங்கையிலும் கிழக்கு மாகாணம் உள்ளிட்ட இலங்கையின் பெரும்பாலான பகுதிகளிலும் தனது வாசகர்களைக் கொண்டிருந்ததுடன் கடல் கடந்து, இந்தியா, பர்மா, மலாயா போன்ற நாடுகளிலும்கூட வடஇலங்கைத் தமிழ்மக்களின் செய்திகளை தெரிவிக்கின்ற ஊடகமாகத் திகழ்ந்திருந்தது.

ஒரு பத்திரிகை என்ற அடிப்படையில் வடஇலங்கையில் ஈழகேசரி தோன்றிய காலமானது ஈழத்தின் அரசியல், சமூகம், வரலாறு பொறுத்து மிகவும் முக்கியம் பெற்றதும் இத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்ட காலப்பகுதியாகவும் உள்ளது. அரசியல் ரீதியில் டொனமூர் அரசியல் திட்டமும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களும் காணப்பட, சமூக ரீதியில் பழைய சம்பிரதாயங்கள், மரபுகள், மூடநம்பிக்கைகள் போன்றவற்றினைத் தகர்த்தெறிய வேண்டிய நிலை அதற்கு ஏற்பட்டது. அவ்வாறே பொருளாதார ரீதியில் பின்தங்கியிருந்த யாழ்ப்பாணத்தினைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையும் காணப்பட்டது. எனவே இத்தகையதொரு பின்னணியில் ஈழகேசரியினது வரவானது இலங்கையில் இடம்பெறுகின்றது. பொதுப்பட இப்பத்திரிகை தோன்றிய காலப்பகுதியிலோ அல்லது அதற்கு முற்பட்ட காலப்பகுதியிலோ தோன்றிய பத்திரிகைகள் எல்லாமே மதப் பிரசாரத்தினையோ அல்லது தொழிலாளர்களது நலன்களையோ இலக்காகக் கொண்டே தோன்றியிருந்தன. காரணம் அக்காலச் சூழ்நிலை. ஆனால் இப்பத்திரிகையோ இத்தகைய நோக்கங்களிலிருந்து முழுவதுமாக விலகி மதசார்பற்று, சமுதாய நலன்களைக் கருத்தில்கொண்டு பணியாற்றியது.

அவ்வகையில் வடஇலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்கள் அவர்களது காலத்தில் பின்பற்றியிருந்த பண்பாட்டு அடையாளங்கள் பலவற்றினை இப்பத்திரிகையின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. இவற்றின் ஊடாகப் பிரமிக்கத்தக்க பண்பாட்டு அடையாளங்கள் பலவற்றினை நாம் அவதானிக்கின்ற அதேநேரத்தில் மிகவும் பிற்போக்கான சில பண்பாடுகளை வழிவழியாகவே மாற்றமின்றி அவர்கள் பின்பற்றி வந்தமையினையும் உணர முடிகின்றது. இத்தகைய பிற்போக்கான அடையாளங்களை ஈழகேசரி கண்டித்தமையும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இப்பத்திரிகை தனது பணியினை நிறுத்தும்வரை இது தொடர்கதையாகவே இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

**சாதிப்பிரச்சினைகள்**

தற்போதுவரை மனிதரிடையே புகுத்தப்பட்ட ஒரு வகையான சமுதாய அமைப்பாகக் கொள்ளப்படுகின்ற இத்தகைய சாதிமுறையானது மக்களைப் பிரித்தாளுகின்ற ஒரு கூட்டத்தினர். உயர்வானவர்களாகவும் பிறர் அவர்களுக்குக் கீழ்ப்பட்டு மனிதம் இழந்தவர்களாகவும் மனிதர்களாக வாழ்வற்கு சமஉரிமையற்றவர்களாகவும் ஆக்குகின்ற நிலைப்பாட்டினைச் சாதியென்ற நிறுவனம் கட்டிக்காத்து வந்துள்ளது. தமிழகத்தில் வளர்ச்சி பெற்றிருந்த சாதிமுறையானது ஈழத்தின்மீதும் தனது செல்வாக்கினை ஏற்படுத்திக்கொண்டதென்பதே உண்மை. வடபகுதியில் 10ஆம் நூற்றாண்டிற்குப் பின்னதாகத் தமது அடிமைக்குடிகளுடன் வந்த வேளாளரினால் தனியான இராச்சியம் அமைக்கப்பட்டதுடன் அவர்களாலேயே இங்கும் சாதிமுறை தொடர்ந்து பின்பற்றப்பட்டது.(சிவத்தம்பி, கா.1994) இவ்வாறு வந்த இவர்கள் தமக்கு அடிமைகள் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் இந்தியாவிலிருந்து அவர்களைத் தருவித்தனர். இவர்களைவிட கிராமங்களில் வாழ்ந்தவந்த ஒடுக்கப்பட்ட மக்களும்கூட இவர்களது சிறைக்கைதிகளாகவே வாழ்ந்தனர். இவ்வாறானதொரு நிலை ஐரோப்பியர்களது காலங்களிலும் தொடர்ந்ததென்றே கூறுதல் வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்த காலத்திலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களிடையிலே ஒருவிதமான விழிப்புணர்வு ஏற்பட்டது. 1924இல் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசினது நடவடிக்கைகள் மேற்குறித்த விடயமாகக் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்திருந்தது. இவ்வமைப்புத்

தனது முதலாவது கூட்டத்தில் எடுத்த தீர்மானங்களில் தீண்டாமை ஒழிப்பும் ஒன்று. 1927இல் மகாத்மா காந்தி இலங்கைக்கு வந்தபோது அவரை வரவேற்பதில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உரிமை உண்டென இவ்வமைப்பு தெரிவித்தமையின் பின்னணியிலேதான் தெல்லிப்பழையில் காந்தியினை வரவேற்பதற்கு அமைக்கப்பட்ட பந்தல் தீக்கிரையாக்கப்பட்டது. மேலும் 1930இல் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் மாநாடு உயர் வகுப்பினரால் குழப்பப்பட்டது. (வெகுஜனன்,இராவணா.1998) இத்தகையதொரு சூழ்நிலையிலேதான் ஈழகேசரிப் பத்திரிகையின் வருகையும் ஆரம்பித்தது. இப்பத்திரிகை தான் வெளிவந்த காலப்பகுதி முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்களது செய்திகளுக்கு முன்னுரிமையினை வழங்கி வெளியிட்டிருந்தது. அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளைத் துணிந்து கண்டனம் செய்தது. இத்தகைய சாதீயத்தினை தமிழ் சமுதாயத்தின் சாபக்கேடாகவும் கருதியது.

**சமாசன சமபோசன பிரச்சினைகள்**

ஈழகேசரி வெளிவந்த காலப்பகுதியில் வடஇலங்கையில் தாழ்த்தப்பட்ட மக்களாகக் கருதப்பட்ட வகுப்பினர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள் பல. குறிப்பாக உயர் வகுப்பாகக் கருதப்பட்ட மக்களது ஆலயங்களுக்குச் செல்ல முடியாது, தேங்காய் உடைக்க முடியாது, தேனீர்ச்சாலைகளுக்குச் செல்ல முடியாது, பொதுக்கிணறுகளில் தண்ணீர் எடுக்க முடியாது, கல்வி கற்க முடியாது, வாகனங்களில் சமனாக அமர முடியாது, பிரேதங்களைப் புதைக்க வேண்டும், பாதணிகள் அணியவோ, குடைகள் பிடிக்கவோ கூடாது, தோள்களில் சால்வை அணிதல் கூடாது போன்ற பலவாறான கட்டுப்பாடுகள் இக்காலப்பகுதியில் காணப்பட்டன. தாழ்த்தப்பட்ட மக்கள் வழிபாடு செய்வதற்கு அவர்களுக்கென தனியான தெய்வங்கள் ஒதுக்கப்பட்டன. மேலும் பெயர்கள்கூட உயர்சாதி மக்கள் சூட்டாத பெயர்களையே அவர்கள் சூட்டுதல் வேண்டும் போன்ற கட்டுப்பாடுகள் அத்தகைய மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்தன.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களாகக் கருதப்பட்ட மக்களுக்கு தமிழ்-இந்துப் பாடசாலைகளில் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. மிஷனரிப் பாடசாலைகளில் குறிக்கப்பட்டளவான அனுமதியே கொடுக்கப்ப ட்டிருந்தது. அதுவும்கூட கடுமையான எதிர்ப்புக்களின் பின்னணியிலேதான் வழங்கப்பட்டி ருந்தது.(சின்னப்பு,ம.2002) இத்தகைய பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் காற்சட்டை, மேலாடை போன்றவை அணியமுடியாது. உயர்சாதி மாணவர்களுடன் சமனாக இருந்து உண்ண முடியாது, விடுதிகளில் தங்கியிருக்க முடியாது போன்ற கட்டுப்பாடுகள் போடப்பட்டன. 1930இல் பாடசாலைகளில் சமாசனம், சமபோசனம் என்பன வழங்கப்பட வேண்டுமென்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. இதற்கு உயர் வகுப்பினர் எனக் கருதப்பட்ட மக்களிடமிருந்து எதிர்ப்புத் தோன்றியதன் காரணமாக 13 பாடசாலைகள் தீக்கிரையாக்கப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக ஈழகேசரியில் செய்திகள் பல காணப்படுகின்றன. அது “அரசாங்கம் கொண்டுவந்த சமாசன சட்டத்தினால் அதிபர்களுக்கு ஏற்படுகின்ற கவலை” என்ற தலைப்பில் தனது வெளியீடொன்றில் பின்வருமாறு ஆசிரியத் தலையங்கத்தினைத் தீட்டியிருந்தது.

> *“ யாழ்ப்பாணத்திலே தற்போது யாவரும் அதிகம் சிந்திக்கும்படி செய்யும் விஷயங்களுள் வித்தியாசாலைகளில் சமாசனங் கொடுப்பதனைப் பற்றியதே. வித்தியாசாலைகளை நடத்துவதில் அதிபர்களுக்கு இது விடயமாகப் பல கண்டனங்கள் உண்டாகின்றன. இவர்கள் சனங்களை திருப்தி செய்வதா? அல்லது அரசினர் கட்டளையை நிறைவேற்றுவதா?* (ஈழகேசரி1930யூலை16)

தாழ்த்தப்பட்ட மக்களாகக் கருதப்பட்ட மக்களில் ஒரு சிலர் பாடசாலைகளில ஆசிரியரானபோது அவ்வாசிரியர்களுக்கு தமிழ்-இந்துப்பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதற்கான அனுமதி கிடைக்கவில்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பினராகக் கருதப்பட்ட மக்களது பிள்ளைகள் கற்கின்ற பாடசாலைகளிலேயே இவர்களுக்கு அனுமதி கிடைத்தது. சமாசனச் சட்டத்தினால் ஏற்பட்ட பதட்ட நிலையினைத் தொடர்ந்து வடஇலங்கையின் பல பாகங்களிலுமிருந்த பாடசாலைகள் தீக்கிரையாக்கப்பட்டமையினைக் கண்டனம் செய்கின்ற ஈழகேசரி மேற்குறித்த விடயமாகப் பல தகவல்களையும் வழங்குகின்றது.

“ஆ இதென்ன கொடுமை” என்ற தலைப்பில் அப்பத்திரிகையில் வெளிவந்த ஒரு செய்தியொன்று பின்வருமாறு

> *“சமாசன சம்மந்தமாக யாழ்ப்பாணத்தில் நாட்டுப்புறங்களில் அநேக வித்தியாசாலைகள் மரியாதை பழிக்கு அஞ்சாத நீசர்களினால்*

*தீக்கிரையாக்கப்பட்டு ஊரெங்கும் பெருங்கிலி உண்டாக்கப்பட்டு வருகின்றது''* (ஈழகேசரி,1930யூலை16)

மேலும் உரும்பிராயில் மேற்குறித்த விடயமாக ஒரு ஆங்கில – தமிழ் பாடசாலையொன்றும் தீக்கிரையாக்கப்பட்டதனால் அப்பகுதியிலும் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.(ஈழகேசரி.1930ஆகஸ்ட்20) உயர் வகுப்பினராகக் கருதப்பட்டவர்கள் அக்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களாகக் கருதப்பட்ட மக்களது குழந்தைகளைத் தமது குழந்தைகள் கற்கின்ற பாடசாலைகளில் சேர்த்ததால் தமது பிள்ளைகளை வேறு பாடசாலைகளுக்கு மாற்றிய சம்பவங்களும் நடைபெற்றுள்ளன. இவ்வாறு பல பாடசாலைகள் எரிக்கப்பட்டு சமாசன, சமபோசனத்திற்கு எதிர்ப்புக்கள் கிளம்பியபோதும் சில பாடசாலைகள் இது வெற்றிகரமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டதனையும் ஈழகேசரி வாயிலாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது. கோப்பாயில் உள்ள அரசினர் கல்லூரியில் இத்தகைய முற்போக்கான சம்பவம் இடம்பெற்றுள்ளது. 1931இல் எல்லா மாணவர்களும் ஒன்றாக அமர்ந்து மதிய உணவினை உண்டதனை அறியமுடிகின்றது. (ஈழகேசரி.1931மார்ச்சு04) 1930இல் இவ்விரண்டும் சட்டமாக்கப்பட்டபோதும் ஈழகேசரி காலம் முடிந்த பின்னரும்கூட இது தொடர்கதையாகத் தொடர்ந்தது. அக்காலத் தமிழ்த்தலைவர்களாகக் கருதப்பட்ட சேர்.பொன். இராமநாதன், வை.துரைசுவாமி போன்ற பலரும்கூட இதற்கு எதிராகக் குரல் கொடுக்காமல் இருந்துள்ளனரென்பதும் குறிப்பிடத்தக்கது.

**ஆலயப் பிரவேச மறுப்பு**

தாழ்த்தப்பட்ட மக்களாக அக்காலத்தில் கருதப்பட்ட மக்களுக்குத் உயர் சமூகத்தவர் எனக் கருதப்பட்டவர்களினால் ஈழகேசரி காலத்தில் மறுக்கப்பட்ட உரிமைகளில் ஆலயப் பிரவேச மறுப்பும் ஒன்றாகும். 1950களின் பின்னராக ஓரளவிற்கு இம்மக்களுக்கு இவ்விடயமாகச் சில உரிமைகள் கிடைத்தாலும்கூட சில கிராமப்புறங்களில் இன்றும் இது தொடர்கதையாகவே இருந்து வருகின்றது.

தாழ்த்தப்பட்ட மக்கள் எனச் சொல்லப்பட்டவர்கள் சைவ ஆலயங்களுக்குள் அனுமதிக்கப்ப டுவதில்லை. சில ஆலயங்களில் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் அவர்கள் வெளிமண்டபத்திலிருந்தே வழிபடுதல் வேண்டும். திருவிழாக் காலங்களில் நடைபெறுகின்ற கலைநிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்குக்கூட அவர்களுக்குத் தனியான இடம் ஒதுக்கப்பட்டு அதனைச் சுற்றிக் கயிறு கட்டப்பட்டிருக்கும். (ஈழகேசி.1949ஜனவரி23) இவர்கள் தமது இல்லங்களில் நடைபெறுகின்ற நன்மை தீமைகளில் இந்துக் கிரியைகள் மேற்கொள்ளவும்கூட அனுமதிக்கப்படுவதில்லை. பொதுப்படப் பார்த்தால் உயர் வகுப்பினர் எனக் கருதப்பட்ட மக்களிடம் ஆரிய வழிபாட்டு முறைகளும் தாழ்த்தப்பட்ட மக்களிடம் திராவிட வழிபாட்டு முறைகளும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இவர்களுக்கென தெய்வங்களும் தனியாக ஒதுக்கப்பட்டிருந்தன. இவை கற்களாகவும் இரும்புச் சூலங்களாகவும் மரநிழல்களில் வைத்து வழிபடப்பட்டன. மிருக வேள்விகள், பேயாட்டங்கள் என்பன இவர்களினால் ஆடப்பட்டன.

ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலப்பகுதியானது ஆலயப் பிரவேச மறுப்பு உச்சம் பெற்ற காலமாகவும் அதனது இறுதிக்காலப்பகுதியானது அவ்வுரிமை பலத்த போராட்டத்தின் பின்னர் வழங்கப்பட்ட காலமாகவும் உள்ளது. ஆலயப் பிரவேசந் தொடர்பாக ஈழகேசரி தனது ஆசிரியத் தலையங்கத்தின் ஊடாகவும், செய்திகள் வாயிலாகவும், கட்டுரைகள் மூலமாகவும், தனக்கு வாசகர்களிடமிருந்து வருகின்ற கடிதங்களைப் பிரசுரிப்பதன் வாயிலாகவும் ஆலயப் பிரவேசத்திற்குத் தனது ஆதரவினை அவ்வப்போது தெரிவித்து வந்தது. ''புலோலியில் காவடிக் கலகம்'' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியே ஈழகேசரிப் பத்திரிகையில் மேற்குறித்த விடயமாக வெளிவந்த முதலாவது செய்தியாக உள்ளது. அதனது சுருக்கம் பின்வருமாறு உள்ளது.

*''………. மேள வாத்தியங்களோடு காவடி கொண்டுசெல்ல புறப்பட்டபோது வேளாளர் காவடி கொண்டு செல்லும் ஒழுங்கையில் கஞ்சல் போட்டும் எல்லை வேலிகளில் நெருப்பினை வைத்தும் தடுத்தனர். ஆயுதந் தாங்கிய பொலிசார்…………. காவடி கொண்டுசெல்லுவதற்கு வழங்கிய அனுமதிச் சீட்டினை ரத்துச் செய்து அவர்களைக் காவடி கொண்டு செல்ல விடாது தடுத்ததும் கலகம் முடிவிற்கு வந்தது.''*(ஈழகேசரி.1930செப்ரெம்பர்03)

1948இல் ஆலயப் பிரவேசந் தொடர்பாக வடஇலங்கை மக்களிடமிருந்த அபிப்பிராயத்தினை ஈழகேசரி பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

> *"யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக்கோயில்களை ஹரிஜனர்கட்குத் திறந்துவிட வேண்டுமென்ற அபிப்பிராயம் இந்துக்களைக் கவர்ந்து வருகின்றது. பழைய கொள்கைகளில் ஊறியுள்ள பெரியவர்கட்கு இது மிகுந்த வெறுப்பைத் தருகின்றது. இவர்கள் இதனை சமய விதிகட்கு மாறாதெனக் கருதுகின்றனர்."*(ஈழகேசரி1948ஏப்ரல்11)

இலங்கையின் வடபகுதியில் மட்டுமன்றித் தமிழர்கள் அதிகளவில் வாழ்ந்து வந்த இலங்கையின் கிழக்குப் பகுதியிலும்கூட இத்தகைய ஆலயப்பிரவேச மறுப்பானது செல்வாக்கினைப் பெற்றிருந்தமையினை ஈழகேசரியின் மூலமாக அறிய முடிகின்றது. கிழக்கிலுள்ள மாமாங்கப் பிள்ளையார் கோயிலுக்குத் தாழ்த்தப்பட்ட வகுப்பினராகக் கருதப்பட்ட மக்களில் சிலர் வழிபாடு மேற்கொள்ளச் சென்ற சமயத்தில் கோயில் அதிகாரிகள் சமயாசாரம் மற்றும் தேசவழமை போன்றவற்றினைக் காரணங்காட்டி அவர்களை ஆலயத்திற்குள் நுழையவிடாமல் தடுத்த தகவலைச் சமகாலத்தில் வெளிவந்துகொண்டிருந்த இந்துசாதனம் என்ற பத்திரிகையின் மூலமாக அறியமுடிகின்றது. (இந்தசாதனம்,1933பெப்ரவரி02) மேற்குறித்த விடயமாகப் பாதிக்கப்பட்டவர்களின் சார்பாகத் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பானது பின்வருமாறு காணப்படுகின்றது.

> *"அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் கோயிலில் நாவலடி நேசம்மா வணங்கும்போது வெளியே பிடித்து விடப்பட்டதனால் 200ரூபா நட்டஈடு கொடுக்கும்படி மனேச்சரில் வைத்த வழக்கு விசாரணை செய்யப்பட்டு 5ரூபா குற்றமும் வழக்குடன் வழக்குச் செலவும் கொடுக்க வேண்டுமென்று எதிரிக்கு கட்டளையிட்டிருக்கின்றது."* (ஈழகேசரி,1933மே25)

மேலும் உயர் வகுப்பினர் எனக் கருதப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவன் ஒருவன் தாழ்ந்த வகுப்பாகக் கருதப்பட்ட ஒரு பெண்ணுடன் முறைதவறிய தொடர்பினை வைத்திருந்தமையினால் அவனை ஆலயத்திற்குள் நுழைய விடாது தடுத்த சம்பவங்களும் வடஇலங்கையில் இடம்பெற்றுள்ளது. மேற்குறித்த விடயமாக யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டில் நடைபெற்ற வழக்கில் சுப்பையா என்பவர் சாட்சியம் தெரிவித்தபோது அவர் குறித்த இருவரையும் தடுத்த காரணத்தினைக் குறிப்பிட்டிருந்தார்.(ஈழகேசரி1937பெப்ரவரி17) இருப்பினும் 1948இன் பின்னராக அதாவது சுதந்திரத்தின் பின்னராக யாழ்ப்பாண சமூகத்தவரிடம் ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவான கருத்துக்கள் காணப்பட்ட நிலையில் அப்போதும் இதனை எதிர்த்து வந்தவர்களை ஈழகேசரி கண்டிக்கத் தவறவில்லை. ஆலயப் பிரவேசத்தினை எதிர்த்து இந்துசமயத்தினை நாடலாம் என்று மனப்பால் குடிப்பவர்களையிட்டு நாம் அச்சமடையாமல் இருப்பது எப்படி என்ற வினாவினையும் அது முன்வைக்கின்றது. (ஈழகேசரி1948மார்ச்சு14) 1948இல் இருபாலையில் அமைந்துள்ள நாச்சிமார் கோயிலில் இதுவரை காலமும் உயர் வகுப்பினராகக் கருதப்பட்ட பிரிவினர் செய்துவந்த பொங்கலுக்குப் பதிலாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினராகக் கருதப்பட்ட மக்களும் பொங்கல் செய்வதற்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இது அக்காலப்பகுதியில் துணிந்து முன்னெடுக்கப்பட்ட முற்போக்கான சம்பவமாகவே தெரிகின்றது.

பல முற்போக்கான சிந்தனையாளர்களின் முயற்சியினால் யாழ்ப்பாணத்திலுள்ள பல இந்து ஆலயங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினராகக் கருதப்பட்ட மக்களது வழிபாட்டின் பொருட்டுத் திறக்கப்பட்டது. ஆலயப்பிரவேச உரிமையளிக்கின்ற சபை என்றதொரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. நல்லூர் முருகன் ஆலயம், வண்ணார்பண்ணை சிவன் கோயில், வண்ணார்பண்ணை பெருமாள் ஆலயம் போன்ற ஆலயங்கள் ஆரம்ப கட்டமாகத் திறக்கப்பட்டன. இதனால் மகிழ்ச்சியடைகின்ற இப்பத்திரிகை தனது வெளியீடொன்றின் தலைப்பினை மேற்குறித்த விடயமாகப் பின்வருமாறு தீட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

> *"இறைவன் சந்நிதியில் எல்லோரும் சமமாயினர். யாழ்ப்பாணம் சாதித்துள்ள அந்தரங்கம் ஹரிஜனர் ஆலயத்திற்குள் பிரவேசித்த காட்சி"* (ஈழகேசரி1956யூலை15)

**சாதிச்சண்டைகள்**

சாதிகளது பெயரினால் சண்டைகளும் பல இலங்கையின் வடபகுதியில் அரங்கேறியுள்ளன. அக்காலப்பகுதியில் சாதிக்குள் சாதி பாராட்டுகின்ற நிகழ்வுகளும்கூட தமிழர் மத்தியில் காணப்பட்டிருந்தது. இவை கிராமப்புறங்களிலேதான் அதிகளவில் காணப்பட்டாலும் நகர்ப்புறங்களும் இதற்கு விதிவிலக்காக அமையவில்லை.

**சைவவாலயங்களின் பிரச்சினைகள்**

ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலப்பகுதியில் இலங்கையின் வடபகுதியில் காணப்பட்ட சைவாலயங்கள் பெருமளவிற்குத் தனியாருக்குச் சொந்தமானவைகளாகவே காணப்பட்டன. இதனால் நிர்வாகம் தொடர்பான பல குறைபாடுகள் ஆலயங்களில் காணப்பட்டன. இத்தகைய அங்கு காணப்பட்ட நிர்வாகக் குறைபாடுகள் பலவற்றினை ஈழகேசரிப் பத்திரிகையினைப் படிப்பதன் வாயிலாகப் பெற முடியும். நிர்வாக முறைகேடுகள், கோயில் அதிகாரிகள் மற்றும் குருமார்களின் கெடுபிடிகள், சின்னமேளம் போன்ற ஆடம்பர நிகழ்வுகள், பலியிடுகின்ற வழக்கங்கள் போன்றன இவற்றில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியன. அவ்வகையில் ஆலயங்களில் காணப்பட்டுவந்த மேற்கூறப்பட்ட குறைபாடுகள் பலவற்றினைத் தனது பத்திரிகையில் செய்திகளாக வெளியிட்டு சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்ற நடவடிக்கைகளில் ஈழகேசரி இறங்கியதெனலாம்.

**நிர்வாகத்தில் குறைபாடுகள்**

ஈழகேசரி வெளிவர ஆரம்பித்த காலத்தில் ஆலயங்களை நிர்வாகம் செய்வோர் தொடர்பான செய்தியொன்றினைப் பின்வருமாறு வெளியிட்டிருந்தது.

> *"தற்காலத்தில் நமது நாட்டில் ஆலயங்கள் தொகையில் அதிகரித்து வருகின்றனவேயன்றி அவைகள் கிரமமாகவும் சாஸ்திர ரீதியாகவும் நடத்தப்படக் காண்பதரிதாகின்றது. ஆலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்திற்கு மாறாகவே அனேக காரியங்கள் நிகழ்கின்றன. பொருள் வருவாய், பொறாமை ஆகிய காரணமாக ஆலயங்கள் ஏற்படுத்தலும் நடாத்தப்படுதலும் சமய விரோதமான செயலாகும்"* (ஈழகேசரி,1930செப்ரெம்பர்17)

தொடர்ந்து மேற்குறித்த விடயமாக ஈழகேசரி தனது கருத்தினைக் கூறுகின்றபோது அதன் அதிபர்கள் அகங்காரம், மமதையெனும் வெறுக்கத்தக்க குணங்களுக்குள்ளாகி உண்மையை அறிகின்ற ஆற்றலையும் இழந்து சமயசாஸ்திரங்களுக்கொவ்வாத அநேக காரியங்களைச் செய்தும் செய்வித்தும் கொடிய பாவத்திற்குள்ளாகின்றனரென அதனது அதிபர்களைக் குறைகூறுகின்றது. அக்காலப்பகுதியில் ஆலயங்களின்மீது மக்கள் கொண்டிருந்த அதீத பற்றினைத் தமக்குச் சாதகமாகப பயன்படுத்திய ஆலயங்களின் அதிபர்களும் குருமார்களும் தமது ஆதாயத்தினைத் தேடிக்கொண்டனர். திருவிழாக்கள் மற்றும் பூசைக் காலங்களில் அவர்கள் கேட்பதனையே தானமாக வழங்குதல் வேண்டும். வரவு செலவுக் கணக்குகள் சர்ச்சைகள் மிகுந்தவையாகவே காணப்பட்டன. எடுத்துக்காட்டாக மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் நிலவிய பிரச்சினைகளைக் குறிப்பிடலாம். (ஈழகேசரி,1940யூலை28) ஆலயக்குருக்கள் என்பவர்கள் எப்படியிருக்க வேண்டும்? எத்தகைய விதிகளை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் போன்ற தகவல்களையெல்லாம் இப்பத்திரிகை காலத்திற்குக் காலம் வெளியிட்டு வந்தது.

அக்காலப்பகுதியில் கோயில்கள் நடாத்திவந்த பலரும் பொருள் வருவாயினை அடிப்படையாகக்கொண்டே அவற்றினை நடாத்தி வந்ததாக ஈழகேசரிப் பத்திரிகை கூறுகின்றது. ஆலயங்களின் எண்ணிக்கை கிராமங்கள் தோறும் அதிகரித்து வந்தமையினாலும் அவை கட்டுப்பாடற்ற வகையில் நிர்வாகிக்கப்பட்டு வந்தமையினாலுமே இத்தகைய நிலை ஏற்பட்டது. குருக்கள் என்ற பெயரில் வருபவர்கள் பலரும் பரம்பரை பரம்பரையாக இத்தகைய தொழிலை மேற்கொண்டு வருவதனாலேயே அவர்கள் தகுதி, ஒழுக்கங்கள் குறைந்தவர்ககளாகக் காணப்பட்டதாக ஈழகேசரி குறிப்பிடுகின்றது. மேலும் குருமார்களிற்கிடையே நடைபெற்ற மோதல்கள் தொடர்பாகவும் பல தகவல்களை இப்பத்திரிகை தருகின்றது. எடுத்துக்காட்டாக 1935இல் ஊரெழுவில் உள்ள விநாயகர் ஆலயமொன்றில் கொடியேற்றத் திருவிழா அன்று அந்த ஊரில் உள்ள பிராமணர் ஒருவருக்கும் அத்திருவிழாவின்போது விசேடமாக வந்த குருமார்கள் சிலருக்குமிடையிலே மோதல் இடம்பெற்றிருந்தது. (ஈழகேசரி,1935பெப்ரவரி10)

**தேவதாசிகளின் நடனம்**

சின்னமேளம் எனப்படுகின்ற ஒரு வகையான நடனமானது ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த சமயத்தில் சைவாலயங்களில் விசேடமாக நடைபெறுகின்ற நிகழ்வாகக் காணப்பட்டது. எனவே இத்தகைய நடனமானது தேவையற்றது எனவும் இதனால் தேவையில்லாத பொருள் விரையம் எனவும் ஈழகேசரி சுட்டிக்காட்டி வந்தது.

இத்தகைய தேவதாசிகள் எனப்படும் நடனம் ஆடுகின்ற பெண்கள் வடஇலங்கை மக்களினால் இழிவான தொழில்களை மேற்கொண்டு வருகின்ற பெண்களாகவே பார்க்கப்பட்டானர். ஆண்களை இவர்கள் கீழான நிலைக்குக் கொண்டு செல்லுகின்ற பெண்களாகவும் ஈழகேசரி காலத்தில் அவர்கள் சித்தரிக்கப்பட்டனர். இவ்வாறு ஆலயங்களில் நடனமாடுகின்ற மேற்குறித்த பெண்களைச் சின்னமேளம் என்ற பெயரினாலேயே அழைத்தனர். வயது, பால் வேறுபாடின்றி இத்தகைய நடனத்தினைப் பார்ப்பதற்கு ஆலயங்களில் மக்கள் கூட்டமானது சேரும். அவ்வகையில் சின்னமேளம் இல்லாத ஆலயத்திருவிழாக்களே இல்லையென்று குறிப்பிடலாம். 1931ஏப்ரல் 8இல் முதன் முதலாக சின்னமேளத்திற்கு எதிராகத் தனது கருத்தினை பின்வருமாறு முன்வைத்த இப்பத்திரிகையானது தனது பணியினை நிறுத்தும்வரை தொடர்ந்தது.

> *''ஐயனார் கோயிலில் கொடியேற்றத் திருவிழாவும் செயய்ப்பட்டது. தேரோட்டமும் நடந்தது. தாசிகள் நடனமும் தாராளம். வாண வேடிக்கைகளும் மிகவதிகம்''* (ஈழகேசரி,1931ஏப்ரல்08)

இத்தகைய சின்னமேளம் நடைபெறுகின்றபோது ஆலயங்களில் நடைபெறுகின்ற சில நிகழ்வுகளை பினவருமாறு இப்பத்திரிகை தெரிவித்திருந்தது.

> *''கோயில்களில் மாத்திரமன்று இந்த மேளங்களுடன் சம்மந்தப்பட்டு அங்குமிங்கும் இழுபடுவோர் படும்பாடு யாராலும் வர்ணிக்க முடியாதது. ஆகா இந்த மேளங்கள் ஆடத்தொடங்கி விட்டாலோ கோயிலுக்கும் அங்கு வந்து போவோருக்கும் ஒரே ஆட்டந்தான். இடையிடையே சீட்டியடித்தல், உவன்ஸ்மோர் கேட்டல், காந்திப்பாட்டு பாடு இல்லாவிட்டால் ஓடு, போகும்போது சாடையாய் முட்டுதல், கண்ணிமைக்காது பார்த்தல், கலகங்கள் செய்தல், சுற்றி வளைத்தல் முதலிய சேட்டைகளும் தாராளமாக நடப்பதனைக் காணலாம்.* (ஈழகேசரி,1936மே17)''

சின்னமேளத்தினை அவ்வப்போது கண்டித்துவந்த இப்பத்திரிகை சமயத்தின் பெயரினால் ஆலயங்களில் தவறான எண்ணங்களுக்கு ஆக்கமளிப்பவர்கள் இருக்கும் வரையும் சன்மார்க்கம் வளர இடமேது எனக்கூறிவந்ததுடன் கண்மூடித்தனமாகச் செலவு செய்யும் யாழ்ப்பாணத்தவர் கஷ்டப்படுகின்ற காலம் அண்மையிலிருக்கின்றதென்பதனை உணர வேண்டுமென எச்சரிக்கின்றது.(ஈழகேசரி,1946மார்ச்சு31) இத்தகைய சின்னமேளத்தினால் ஏற்படுகின்ற கேடுகள் தொடர்பாக வாசகர்களினால் எழுதப்படுகின்ற கட்டுரைகளையும்கூட இப்பத்திரிகை காலத்திற்குக் காலம் வெளியிட்டு வந்துள்ளது. அக்காலப்பகுதியில் சின்னமேளத்தில் ஈடுபட்ட சிலர் விபச்சாரிகளாக இருந்ததுடன் ஒரு சிலரது ஆசைநாயகிகளாகவும்கூட வாழ்ந்துள்ளனர். இவர்கள் உண்மையாக சங்கீதத்திலோ அல்லது நடனத்திலோ தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கவில்லை. சின்னமேளத்தினை இரசிப்பதற்கு சில ஆண்கள் தங்களது மனைமாரது நகைகளை அடைவு வைத்த அல்லது விற்ற சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இவர்கள் கமலா கோஷ்டியினர், ருக்மணி கோஷ்டியினர், புத்தூர் மார்க்கண்டு கோஷ்டியினர் எனப் பல பெயர்களில் நடனங்களை நடாத்தி வந்தனர். அக்காலப்பகுதியில் இதனை எதிர்ப்பவர்களைவிட நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆரிப்பவர்களே அதிகமாக இருந்துள்ளனர். ஈழகேரியினைவிட அக்காலத்தில் வாழ்ந்த சில முற்போக்கான இளைஞர்கள், சமூக நிறுவனங்கள் போன்றவை இத்தகைய சின்னமேளத்திற்கு எதிராகக் குரல்களை எழுப்பி வந்துள்ளன. சிலர் இந்தியாவிலிருந்து திருவிழாக்களுக்காக அழைத்தும் வரப்பட்டனர். இவர்களில் சிலர் வடஇலங்கையில் கடத்தப்பட்ட நிகழ்வுகளும் நடந்துள்ளன. சமகாலத்தில் இது வழக்கொழிந்து விட்டதென்றே கூறவேண்டும். சினிமாத்துறையினது வளர்ச்சி மற்றும் நாகரிக மாற்றங்கள் போன்றன இதற்குப் பிரதான காரணங்களாகும். பொதுவாக பெண்கள் நாடகங்கள் நடிப்பதற்கும், பரதநாட்டியம் பயில்வதற்கும் ஆரம்பகாலங்களில் தயக்கம் காட்டியமைக்கு இத்தகைய சின்னமேளமும் பிரதான காரணங்களிலொன்றாக அமைந்திருந்ததெனலாம்.

**பலியிடுதல் வழக்கம்**

ஆலயங்களில் பலியிடுகின்ற வழக்கமானது ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்துகொண்டிருந்த காலப்பகுதியில் வடஇலங்கையின் பல பகுதிகளிலும் நடைபெற்றுவந்த ஆலய வழிபாடுகளது ஒரு பகுதியாகவே காணப்பட்டிருந்தது. படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை இத்தகைய வழிபாட்டினை விரும்பி ஏற்றுக்கொண்டிருந்தனர். அதேநேரத்தில் இதனை எதிர்த்த இப்பத்திரிகை பலியிடுதலுக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்தது. இத்தகைய பலியிடலை மேற்கொள்வதனால்

தம்மைப் பிடித்துள்ள குறைகள் பல இல்லாதொழிந்துவிடுமென்பது இதனுடன் தொடர்புபட்டவர்களது நம்பிக்கையாகும்.

1931ஏப்ரல்8இல் இப்பத்திரிகையில் ''கண்ணோட்டம்'' என்ற தலைப்பில் பலியிடல் தொடர்பாக வெளிவந்த செய்தியொன்று பின்வருமாறு காணப்படுகின்றது.

> ''*உரும்பிராய், சுன்னாகம் முதலியவிடங்களில் ஆடு, கோழிகள் வெட்டுவது பற்றிச் சில பத்திராதிபர்கள் பழஞ்சலிப்புக்கொள்ளுகின்றனர். இங்குள்ளவர்கள் பரம்பரையென்கிறார்கள். என்ன செய்வது புருஷன், பிள்கைளையிழந்தவர்கள் புதுவருடத்திற்கு முன் பழஞ்சலிப்புக்கொள்வது போல் நாமும் கட்டியழ வேண்டியதுதான்*''(ஈழகேசரி,1931ஏப்ரல்08)

இத்தகைய பலியிடுகின்ற பழக்கமானது தொடக்க காலங்களில் தாழ்த்தப்பட்ட பிரிவினர்களாகக் கருதப்பட்ட மக்களிடமே அதிகளில் காணப்பட்டிருந்தது. இருப்பினும் பின்னாளில் உயர் வகுப்பினர் எனப்பட்ட ஒரு பிரிவினரிடமும்கூட இது இடம்பிடித்துக்கொண்டது. பொதுவாக ஜனவரியிலிருந்து மார்ச்சு மாதம் வரை ஆலயங்களில் நடைபெறுகின்ற இந்நிகழ்வினைக் காண்பதற்குப் பல்வேறு ஊர்களிலிருந்தும் தமது சொந்த இடங்களுக்குப் பலரும் திரும்புவர். இப்பின்னணியில் பலியிடுதலை நிறுத்தக்கோரிக் கட்டுரைகள், வாசகர்களது கடிதங்கள், கவிதைகள், செய்திகள் வாயிலாகப் பல்வேறு நடவடிக்கைகளை இப்பத்திரிகை மேற்கொண்டது.

பலியிடப்படுகின்ற மிருகங்கள் படுகின்ற துன்பங்களை நவாலிக்கிழார் என்ற புனை பெயரினைக் கொண்ட ஒருவர் ''ஆடு கோழிகளின் முறைப்பாடு'' என்ற தலைப்பில் பின்வருமாறு முறைப்பாடொன்றினை ஈழகேசரியினுடாக வெளிப்படுத்தியிருந்தார்.

> ''*உங்களுக்குத் தந்தையாகிய அம்மையார் பெற்ற பிள்ளைகளுள் யாமும் ஒரு சாரார். ஏனையோர் வலிமையுடையோராய்ப் பிறக்க நாங்கள் வாய் பேசா ஏழைகளாய்ப் பிறந்தோம். வலிமையுடைய எங்கள் அண்ணன்மார் எம்மைத் தங்கள் அரிய உடன்பிறப்புக்கள்என்று எண்ணி மனமிரங்காது ஐயையோ சமய வழக்கம் எனும் பொய்ச்சாட்டை முன்னிட்டு எங்களில் ஆயிரக்கணக்கானவர்களைப் பிடித்து அம்பாள் உறையும் திருக்கோவிலுக்கு முன்னே கொண்டு போய்க் கதறக் கதற பதறப் பதற வெட்டிக் கண்கழிக்கின்றனர்*''(ஈழகேசரி,1932யூன்15)

ஈழத்துக் கிராமிய கடவுள்களான காளி, வைரவர், வீரபத்திரர், அண்ணாமார் கூட்டத்தார் போன்ற தெய்வங்களுக்கே இவை நேர்ந்து வீடுகளில் வளர்க்கப்படும். இவ்வாறு ஆலயங்களுக்கு நேர்ந்துவிடப்படுகின்ற கிடாய்கள் தங்கச்சங்கலி மற்றும் மாலையுடன் கொம்புகளைச் சீவிக் கூராக்கி குங்குமமும், சந்தனமும் கலந்த பொட்டிட்டு அவை கோயிலுக்கு அழைத்துவரப்படும். சில ஊர்களில் இவற்றுக்கு கள், சாராயம் போன்றனவும் பருக்கப்படுவதுண்டு. தமது ஆட்டுக்கிடாய் சிறந்த கிடாயாக வரவேண்டுமென்பதன் பொருட்டு சிறந்த உணவு வகைகளை உரிமையாளர்கள் அவற்றுக்கு ஊட்டி வளர்த்தனர். இவ்வாறு ஆலயங்களுக்கு ஆடுகள் அழைத்து வரப்படும்போது கூடவே சின்னமேளம், மேளக்கச்சேரிகள், பக்திப்பாடல்கள் போன்றனவும் பாடப்பட்டு வருவதுமுண்டு. இவ்வாறு இரவு நேரங்களில் அழைத்த வரப்படுகின்ற மிருகங்கள் காலையிலேயே பலியிடப்படுவது வழக்கம்.

ஈழகேசரியும் சில முற்போக்கான தலைவர்களும் மேற்கொண்ட சில விடாமுயற்சிகளின் காரணமாக 1940களின் பின்னராக பலியிடல் தொடர்பாக மக்களது மனங்களில் மாற்றங்கள் பல ஏற்பட்டன. ஆலயங்கள் பலவற்றில் பலியிடுகின்ற பழக்கமானது படிப்படியாகக் கைவிடப்பட்டு வந்ததனை ஈழகேசரிப் பத்திரிகையின் மூலமாக அறிந்துகொள்ள முடிகின்றது. எடுத்துக்காட்டாக 1943இன் நடுப்பகுதியளவில் அராலி கிழக்கு முத்துமாரியம்மன் ஆலயத்தில் பலியிடல் நிறுத்தப்பட்டதனை ''வழிகாட்டல் ஆலயம்'' என்ற தலைப்பில் செய்தியாக ஈழகேசரி வெளியிட்டி ருந்தது.(ஈழகேசரி,1943யூன்20)

இருப்பினும் இன்றும்கூட ஆலயங்கள் சிலவற்றில் இத்தகைய மிருக பலியிடுகின்ற வழக்கம் தொடர்ந்து இருந்துவருவதனை மறுக்க முடியாது. குறிப்பாக பிரான்பற்று, நவாலி, சுன்னாகம் பருத்தித்துறை போன்ற ஒரு சில இடங்களில் தற்போதும் பலியிடுகின்ற வழக்கம் கிராமிய வழிபாடுகளிலொன்றாக இருந்துவருகின்றது.

**நிறைவுரை**

ஈழகேசரிப் பத்திரிகை வெளிவந்த காலப்பகுதிக்குரிய வடஇலங்கைத் தமிழர்களின் பண்பாட்டின் எதிர்மறையான அடையாளங்களில் இவை பிரதான இடத்தினைப் பெறுகின்றன. இவையெல்லாம் அக்கால வடஇலங்கைத் தமிழ் சமுதாயத்தினது சாபக்கேடுகளிலொன்றாகவும் பார்க்கப்படுகின்றது. உண்மையில் இவற்றில் சிலவே இன்று மறைந்துள்ள நிலையில் சில நேரடியாகவும் வேறு சில மறைமுகமாவும் அவர்களது பண்பாட்டினது அங்கங்களிலொன்றாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. தமிழகத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்ட சிறப்பான பண்பாட்டம்சங்கள் இரு தேசத்தின் உறவின் சிறப்பினை வெளிக்கொண்டு வருகின்ற அதேநேரத்தில் அங்கிருந்து நாம் பெற்றுக்கொண்ட எதிர்மறையான பண்பாட்டம்சங்கள் சில அத்தகைய உறவின் சிறப்பினை மழுங்கடிக்கின்ற வகையிலும் உள்ளன. இத்தகைய எதிர்மறையான பண்பாட்டம்சங்கள் அக்கால சமுதாயத்தில் குறிக்கப்பட்ட ஒரு பிரிவு மக்களை வெகுவாகப் பாதித்தது. அவர்கள் மனிதம் இழந்தவர்களாகவே வாழ்ந்தனர். இது அடிமைமுறைக்கு ஒப்பான செயலாகும். மேலும் இது அக்காலச் வடஇலங்கைச் சமுதாயத்தின் மனித உரிமை மீறல்களின் ஒரு வடிவமாகவே பார்க்கப்படுதல் வேண்டும்.

**உசாத்துணை**

**நூல்கள்**

சிவகுருநாதன், இ.(1993). இலங்கையில் தமிழ் புதினப் பத்திரிகைகளின் வளர்ச்சி, குமரன் வெளியீடு, சென்னை.

சிவத்தம்பி, கா.(1994).தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டு பிடிப்பும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிறைவேட் லிமிட்டெட், சென்னை.

சுப்பிரமணியம்,நா.(1978). ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம், முத்தமிழ் வெளியீட்டு மன்றம், முள்ளியவளை.

வெகுஜனன், இராவணா.(1998). சாதியும் அதற்கு எதிரான போராட்டங்களும், புதியபூமி வெளியீடு, யாழ்ப்பாணம்.

**பத்திரிகைகள்**

இந்துசாதனம், சைவபரிபாலனசபை, வண்ணார்பண்ணை.

ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

உதயன், உதயன் பத்திரிகை பிறைவேட் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

---